**செய்தி வெளியீடு எண்:657** **நாள்: 05.10.2017**

இன்று (5.10.2017) சென்னை சேப்பாக்கத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர்கள், மாவட்ட வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்களுடன் மாநில அளவிலான கலந்தாய்வுக்கூட்டம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்ட, உலகம் போற்றும் உன்னத திட்டமான விலையில்லா அரிசி வழங்கும் திட்டமும், இத்திட்டத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் கூடுதல் பயன்களுடன் உணவு பாதுகாப்பு சட்டமும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் பெருமிதத்துடன் கூறினார்.** தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 34 ஆயிரத்து 877 நியாய விலை அங்காடிகள் மூலம், 1 கோடியே 94 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் முழு பயன்களும் உரியவர்களை சென்றடைய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது நம் அனைவரின் தலையாய கடமையாகும் என்றும் தெரிவித்தார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, 330 கோடி ரூபாய் செலவில் அறிவிக்கப்பட்ட மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம், 01.04.2017 முதல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இன்று வரை 1 கோடியே 63 இலட்சம் (85%) மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 4 இலட்சத்து 86 ஆயிரம் மின்னணு குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகிறன என்றும் தெரிவித்தார். மீதமுள்ள குடும்ப அட்டைகளின் புகைப்படம் பெறவேண்டியது, ஆதார் விவரங்கள் சரிபார்த்தல்

ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை விரைந்து முடித்து அனைவருக்கும் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டின் பொது விநியோகத்திட்ட தேவைகளுக்கு தரமான அரிசி, குறிப்பாக தீபாவளி பண்டிகை நாட்களில் விநியோகம் செய்ய பச்சரிசி, சர்க்கரை, கோதுமை ஆகியனவும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பருப்பு, பாமாயில் முதலியனவும் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர்கள் அனைத்து விநியோக கிடங்குகளிலும் அத்தியாவசிய பொருட்களை போதுமான அளவு கையிருப்பில் வைத்து, நியாய விலை அங்காடிகளுக்கு சீரான முறையில் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும், டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ள இடங்களில் விவசாயிகளின் தேவையறிந்து, மாவட்ட ஆட்சியரின் அனுமதியோடு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமையன்று நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாம்களில், மனுக்கள் பெறப்பட்டு, அன்றைய தினமே தீர்வு காணப்படுகிறது. தற்போது பொது விநியோகத்திட்டம் முழுவதும் கணிணி மயமாக்கப்பட்டுள்ளதால் குடும்ப அட்டைதாரர்கள் தங்களது குறைகளுக்கு இணையவழி சேவை மூலமாக தீர்வு காண வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. இதற்கென www.tnpds.gov.in என்ற இணையவழி மூலமாகவும், கட்டணமில்லா தொலைபேசி **1967** அல்லது **1800 425 5901** என்ற எண்களில் தொடர்பு கொண்டும் குறைகளை தெரிவித்து சரி செய்து கொள்ளலாம். இருப்பினும் குடும்ப அட்டைதாரர்கள் உணவுத்துறை அலுவலர்களிடம் தங்களுடைய குறைகளை குறைதீர் முகாம்களில் நேரில் தெரிவித்து தீர்வு காணும் நடைமுறையும் தொடர்கிறது. இதன்படி, **09.09.17**ல் மாநிலம் முழுவதும் **282** மையங்களில் நடைபெற்ற குறைதீர் முகாம்களில் பெறப்பட்ட அனைத்து

**8322** மனுக்கள் மீதும் அன்றைய தினமே தீர்வு காணப்பட்டது. மேலும் இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் மட்டும்தான் இவ்வகை முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில், கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் ஒட்டுநர்கள் மட்டுமல்லாது கடத்தலுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் துணை போகும் நபர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். கடந்த **6** ஆண்டுகளுக்கும் மேலாக, உணவு பொருள் கடத்தல் தடுப்பு காவல் துறையினரால் எடுக்கப்பட்டு வரும் கடுமையான தொடர் நடவடிக்கைகளால் இதுவரை **1,005** நபர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் (BM ACT) கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை **15** கோடியே **68** லட்சம் மதிப்பிலான கடத்தல் பொருட்கள் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டுவரும் உணவு கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை பிற மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்ற மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திருமதி எம். சுதாதேவி, இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருமதி.எஸ்.மதுமதி, இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் திரு. பிரதீப் வி.பிலிப் இ.கா.ப., காவல் துறை தலைவர் ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் ஜி.கே.அருண்சுந்தர் தயாளன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**